2011 ஜனவரி 12]

3. தகவல் கோரல்

(அ) திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் கூடுதலாக இரு வழிகளைத் திறத்தல் மற்றும் கோயில் நகைகளைப் பாதுகாத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

முற்பகல் 10–50

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ஆண்டுக்குப் பல இலட்சம் மக்கள் வந்து அருள் பெற்றுச் செல்கிறார்கள். அந்தக் கோயிலுக்கு இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்வதாலும், கூட்ட நெரிசலின்போது அடிதடி ஏற்பட்டு, வம்பு வழக்குகள் வருகின்ற காரணத்தினாலும் இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகளும் அங்கிருக்கின்ற அறங்காவலர் குழு உறுப்பினர்களும், தலைமை ஸ்தபதியும் சேர்ந்து இன்னும் இரு வழிகளைக் கூடுதலாகத் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்பொழுது, அங்கு பல ஆண்டுக் காலமாக கடவுளுக்கும், பக்தர்களுக்கும் இடையிலாக இருக்கின்ற ஸ்தலத்தார் என்று சொல்லக்கூடியவர்கள் இது போன்ற செயலை செய்யக் கூடாது என்று தடுத்தும், நேற்றையதினம் கடலில் குதிக்கப் போவதாகச் சொல்லி ஆர்ப்பாட்டம் செய்தும் வருகின்றார்கள். இதற்கெல்லாம் என்ன அடிப்படைக் காரணம் என்று பார்த்தால், சில தகவல்களை இந்த அவைக்குத் தெரிவித்திட விரும்புகிறேன். அந்தக் கோயிலில் கிட்டத்தட்ட 1,800 ஆண்டுக் காலம் பழமைவாய்ந்த வைரம், வைடூரியம், கோமேதகம், பச்சைரக புஷ்பராகம் போன்ற விலை மதிக்க முடியாத ஆபரண நகைகள் இருக்கின்றன. இதுவரையிலும் இந்து சமய மற்றும் அறநிலையத் துறைச் சட்டம், 1959, பிரிவு 42–இன்படி இந்து சமய மற்றும் அறநிலையத் துறையினுடைய ஆணையர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, இணை ஆணையர் அவர்களோ, துணை ஆணையர் அவர்களோ, அறங்காவலர் குழுத் தலைவர் அவர்களோ, உறுப்பினர்களோ கொண்ட ஒரு கூட்டுக் குழுதான் இந்து சமய மற்றும் அறநிலையத் துறைக்கு உட்பட்ட கோயில்களுக்குச் சொந்தமாக இருக்கின்ற ஆபரணங்கள், நகைகளைப் பூட்டி சாவியை

[திரு. தி. வேல்முருகன்] [2011 ஜனவரி 12

பத்திரமாகப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். ஆனால், அதற்கு மாறாக, இந்து சமய மற்றும் அறநிலையத் துறையினுடைய ஆணையர் அவர்களின் ஆணைக்கு மாறாக, அந்தச் சாவியை தனிப்பட்ட நபர்கள் கையிலே வைத்துக்கொண்டு, விலை மதிப்பிட முடியாத, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புமிக்க நகைகள் இன்றைக்கு களவாடப்பட்டிருப்பதாகவும், பல்வேறு வைரக் கற்கள், புஷ்பராகம் மற்றும் கோமேதகங்கள் திருடப்பட்டிருப்பதாகவும், செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

பொதுமக்களின் வசதிக்காகவும், பக்தர்களின் வசதிக்காகவும் ஒரு முயற்சியை, நடவடிக்கையை, அரசும் இந்து சமய மற்றும் அறநிலையத் துறையும் எடுக்கின்றபோது, இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்ற அந்தக் கும்பல் அதைத் தடுப்பதற்கு முயற்சிப்பது வருத்தத்திற்குரிய ஒரு செயலாகும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை நான் வேண்டுவது, உடனடியாக பக்தர்களின் வசதிக்கு ஆவன செய்ய வேண்டும். இப்போது எப்படி திருப்பதியில் பக்தர்களின் வசதிக்காக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு பல்வேறு வழிகளிலே சிறப்புத் தரிசனம் என்றும், இலவச தரிசனம் என்றும் ஏற்பாடு செய்திருக்கிறார்களோ அதைப் போன்று செய்வதோடு, அந்தச் சாவியை உடனடியாக இந்து சமய மற்றும் அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து இனிவருங்காலங்களில் நகைகள் திருடு போகாமல் இருப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நகைகள் திருடு போய் இருந்தால், திருடர்கள்மீது வழக்குப் பதிவு செய்தும் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கும் அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் இருக்கக்கூடிய நடைமுறைகள் தொடர்பாக சில

கருத்துகளை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள். திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஏறத்தாழ 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் உருவான திருக்கோயில். இந்தத் திருக்கோயிலுக்கு கடந்த காலங்களில் வந்து சென்ற பக்தர்களின் எண்ணிக்கையைவிட சமீபகாலங்களில் ஏராளமான பக்தர்கள் வந்து செல்கிறார்கள். குறிப்பாக, கந்தசஷ்டி, வைகாசி விசாகம் போன்ற திருவிழாக் காலங்களில் பக்தர்களுடைய எண்ணிக்கை இலட்சக்கணக்கிலே பெருகி உள்ளது. ஆகவே, இதைக் கருத்தில்கொண்டு, வந்து செல்லக்கூடிய பக்தர்களுடைய வசதிக்காக திருக்கோயிலில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி சன்னதி மற்றும் அருள்மிகு சண்முகர் சன்னதி அமையப்பெற்றுள்ள மகா மண்டபத்தில் தற்போது பக்தர்கள் உள்ளே செல்வதற்கு தெற்குபுறம் ஒரு வழியும், வெளியே செல்வதற்கு கிழக்குப்புறம் ஒரு வழியும் ஆக இரண்டு வழிகள் உள்ளன. இந்த வழிகளில் உள்ளே சென்று வெளியில் வருவதற்கு பக்தர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். உள்ளே செல்லும் இந்த வழிகளில் ஒரே சமயத்தில் பொது தரிசனத்திற்குச் செல்லும் பக்தர்களும், சிறப்புத் தரிசனத்திற்குச் செல்லும் பக்தர்களும் திருக்கோயில் பணியாளர்களும் உள்ளே சென்று வரவேண்டிய நிலை இருக்கிறது. அதனால் அந்த வழியில் தினந்தோறும் அதிக நெரிசல் ஏற்பட்டு வருகிறது என்பதைக் கண்டறிந்து இதனைச் சரிசெய்வதற்காக பல ஆலோசனைகள் திருக்கோயில் நிருவாகத்தால் செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக, இந்து சமய மற்றும் அறநிலையத் துறையினுடைய தலைமை ஸ்தபதி திரு. முத்தையா அவர்களை அழைத்து மகா மண்டபத்தைப் பார்வையிட்டு ஆலோசனை வழங்கிடக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில், திரு. முத்தையா ஸ்தபதி அவர்கள் மேற்படி மகா மண்டபத்தினைப் பார்வையிட்டு இந்த மண்டபத்தில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி சன்னதிக்கு நேராகவும், அருள்மிகு சண்முகர் சன்னதிக்கு நேராகவும் இரண்டு நுழைவாயில்கள் இருப்பதாகவும் மகா மண்டபத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஜெயந்திநாதர் சன்னதிக்கு நேராக தெற்குப்புறத்தில் ஒரு வாயிலும் அருள்மிகு நடராஜர் சன்னதிக்கு நேராக தெற்குப்புறத்தில் மற்றொரு வாயிலும் அமைக்கலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பொதுவாக, ஒரு சன்னதியின் எதிரே நுழைவு வாயில் அமைக்க வேண்டுமென்று ஆகம மற்றும் சாஸ்திர விதிகளில் சொல்லப்பட்டுள்ளது என்று அவர் தன்னுடைய அறிக்கையில்,

[திரு. கே.ஆர். பெரியகருப்பன்] [2011 ஜனவரி 12

தெரிவித்திருக்கிறார். இந்தக் கருத்து தொடர்பாக, இத்திருக்கோயில் 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் உருவான திருக்கோயில் என்ற காரணத்தாலும் பொதுமக்களுடைய, பக்தர்களுடைய கருத்துகளைக் கேட்டறிய வேண்டும் என்ற முறையிலும் முன்னறிவிப்பாக அறநிலையத் துறையின் சார்பில் அந்தப் பகுதி மக்களுக்கு அறிவிப்பாக பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டது.

முற்பகல் 10—55

துறை சார்பில் 'இப்படி இரு வழிகளை அந்தத் திருக்கோயிலில் நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன; ஆகவே, பொதுமக்கள், பக்தர்கள் இந்து சமயத்தைச் சார்ந்த பிற அமைப்புகள் இதுபற்றிய கருத்துகளைத் துறைக்கு தெரிவிக்கலாம்' என்று விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது; அது செய்தியாக வந்திருந்தது. அதை நல்லெண்ணம் கொண்ட பலரும் பாராட்டியிருக்கிறார்கள். குறிப்பாக, இன்றைக்கு தமிழகத்தின் அனைத்துத் திருக்கோயில்களிலும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு, சுற்றுச்சூழல் நல்லமுறையிலே பாதுகாப்பாக வைக்கப்பட்டு வருகிறது. அதிலும் திருச்செந்தூர் கோயிலில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வரக்கூடிய பக்தர்களும் பாராட்டுகின்றார்கள். அந்தப் பகுதியிலிருந்து இதுவரை நல்ல செய்திகள்தான் ஆதரவாக வந்திருக்கின்றன. இதுபற்றி தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கலாமென்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துகளின் அடிப்படையில் பக்தர்களுடைய நன்மைக்காக, வசதிக்காக, வந்து செல்லக்கூடிய பக்தர்கள் எளிதில் தரிசனம் செய்வதற்கு ஏதுவாக வழிகள் அமைப்பதுபற்றி முடிவெடுக்கப்படும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த காலத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை இங்கே நினைவுபடுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக, திரிசுதந்திரர்கள் என்று சொல்லப்படுகின்ற ஸ்தலத்தார் அதிலே ஒரு பிரிவாக இருக்கிறார்கள். 1959 ஆம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலையத் துறையினுடைய தனிச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டங்கள் இயற்றப்படுவதற்கு முன்னரே அந்த ஸ்தலத்தார்கள் திருக்கோயிலினுடைய விலையுயர்ந்த நகைகள், ஆபரணங்கள் போன்றவற்றைத் தங்களது பொறுப்பிலே

2011 ஜனவரி 12] [திரு. கே.ஆர். பெரியகருப்பன்]

வைத்திருந்தார்கள். அதற்கான பெட்டகத்திற்கு 4 சாவிகள் உண்டு. அந்த 4 சாவிகளும் முதலில் அவர்களிடத்திலேதான் இருந்தன.

1966 ஆம் ஆண்டு அந்த ஸ்தலத்தார்களில் சிலர் குறிப்பாக, 4 நபர்கள் முறைகேடுகளில் ஈடுபட்டதாகவும், அங்கிருந்த சில நகைகளை அவர்கள் கையாடல் செய்ததாகவும் அதுபற்றிய தணிக்கைக் குழு ஆய்வு செய்து, 1967 ஆம் ஆண்டு அவர்களிடத்திலேயிருந்த 4 சாவிகளில் 2 சாவிகள் துறையின்வசம் ஒப்படைக்கப்பட்டு, 2 சாவிகள் இப்பொழுதும் ஸ்தலத்தார்வசம் இருக்கின்றன. ஆனால், இது இந்து சமய மற்றும் அறநிலையத் துறையினுடைய விதிகளுக்கு முரணானது. இரட்டை சாவி முறைதான் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆகவே, 2 சாவிகளை சம்பந்தமில்லாமல் ஸ்தலத்தார்கள் வைத்திருக்கிறார்கள். அது அவர்களிடத்திலே இருக்கக் கூடாது என்பதற்காக நாம் நீதிமன்றத்தை நாடியிருக்கிறோம். அந்தவகையிலே ஒரு சாவி துறையினுடைய அதிகாரி, கோயில் பொறுப்பு வகிக்கக்கூடிய அதிகாரியிடத்திலும், மற்றொரு சாவி அறங்காவலர் குழுத் தலைவரிடத்திலும்தான் இருக்கவேண்டும். அந்த முறையைத் தொடர்ந்து அமல்படுத்துவதற்காக நேற்றையதினம் (11–1–2011) அவர்களுக்குக் கெடு விதிக்கப்பட்டிருந்தது. அவர்கள் இப்போது 15 நாட்கள் time கேட்டிருக்கிறார்கள். இதற்கிடையில் நேற்றைய முன்தினம் மதுரை, உயர் நீதிமன்ற பெஞ்ச்க்கு அவர்கள் சென்றிருக்கிறார்கள். தடையாணை எதுவும் அவர்களுக்கு நீதிமன்றம் வழங்கவில்லை. ஆகவே, விரைவில் அந்த 2 சாவிகளையும் கைப்பற்றி துறை அந்தப் பொறுப்புகளை முழுமையாக ஏற்கும்.

1966–ல் சில நகைகள் கையாடல் செய்யப்பட்டதாக 1987–ல் தணிக்கை அறிக்கை தெரிவித்திருக்கிறது. 1967 ஆம் ஆண்டு அறிக்கையின்படி பார்த்தால் அன்றைய மதிப்பீட்டின்படி ரூ.70,000/– மதிப்புள்ள நகைகள் குறைவாக இருப்பதாகவும், அதை ஈடுசெய்வதற்கு அந்த 4 பேரும் பொறுப்பேற்க வேண்டுமென்றும் சொன்னார்கள். பாதி நகைகள் நீதிமன்றத்தின்மூலமாக ஒப்படைக்கப்பட்டு திருக்கோயிலின்வசம் வந்திருக்கின்றன. மீதித் தொகையை அவர்கள் கட்ட வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. அது நடவடிக்கையில் இருக்கிறது.

[திரு. கே.ஆர். பெரியகருப்பன்] [2011 ஜனவரி 12

அதன்பிறகு, 1982 ஆம் ஆண்டு மீண்டும் இந்து சமய மற்றும் அறநிலையத் துறையினுடைய தணிக்கைக் குழு அதை ஆய்வு செய்து 1966–ல் ஏற்பட்ட அந்தப் பொருள் இழப்பைத் தவிர வேறு எந்தவிதமான பொருள் இழப்பும் ஏற்படவில்லை; 1967–ல் ஆய்வறிக்கையின்போது என்ன மதிப்பு இருந்ததோ, அதே மதிப்பு தொடர்ந்து இருப்பதாகவும் சொல்லப்பட்டது. அதேபோல் 17 ஆண்டுகளுக்குப் பிறகு 2009 ஆம் ஆண்டும் மறுமதிப்பீடு செய்யப்பட்டது. ஆக இந்த இடைப்பட்ட காலத்தில் எந்தவிதமான முறைகேடுகளும், தவறுகளும் மற்றும் கையாடல்களும் அங்கு நடந்ததற்கு வாய்ப்புகள் இல்லை. 2 சாவிகள் ஸ்தலத்தார்களிடம் இருக்கின்றன; 2 சாவிகள் கோயில் நிர்வாகத்திடம் இருக்கின்றன. ஆகவே, எதிர்காலத்தில் அந்த 2 சாவிகளையும் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். எந்தவகையான தவறுகளும் 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு இன்றைய தேதிவரையில் நகைகள் மற்றும் ஆபரணங்கள் விஷயங்களில் நடைபெறவில்லை என்பதைப் பேரவைக்கு தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(ஆ) வேலூர், எருது விடும் திருவிழா நடத்த அனுமதி பெற்றுத் தருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. ஞானசேகரன். திரு. வேல்முருகன், no further clarification. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், பேசுங்கள்.

முற்பகல் 11–00

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் விழா வருகிறபொழுது 'எருது விடும் திருவிழா' தொன்றுதொட்டு எல்லா கிராமங்களிலும் கொண்டாடப்படுகிற வழக்கம் இருந்துவருகிறது. இந்த ஆண்டு எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் எருது விடும் திருவிழாவிற்கு அனுமதி அளிக்க முடியாது என்று திட்டவட்டமாக கூட்டம் போட்டு இன்று அறிவித்திருக்கிறார்கள். அதனால் எங்களுடைய மாவட்ட மக்கள் மிக கொந்தளிப்போடு இருக்கிறார்கள். ஜல்லிக்கட்டு, எருது விடும் திருவிழா, மஞ்சுவிரட்டு என்பவையெல்லாம் தமிழர்களுடைய வீர விளையாட்டுகள். இது இன்று அல்ல, நேற்று அல்ல, சங்க காலத்திலிருந்து தொடர்ந்து

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS